

ஊட்டியில் நடைபெற்ற துணைவேந்தர்கள் மாநாட்டை துவக்கி வைத்த இந்திய துணை ஜனாதிபதி ஜெகதீஷ் தங்கர் ஊட்டி அருகே உள்ள தோடர் பழங்குடியின கிராமமான முத்தநாடு மந்துக்கு சென்று அவர்களது கோவிலில் வழிபாடு நடத்தி பழங்குடியின மக்களுடன் நடனமாடி அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். அவருடன் தமிழக ஆளுநர் ஆர் என் ரவி, செய்தித் துறை அமைச்சர் மு பெ சாமிநாதன், மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு அரசுத்துறை அதிகாரிகள் தோடர் பழங்குடியின மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# உலக நாடுகள் மத்தியில் இந்தியா வல்லரசு நாடாக மாறி வருகிறது ஊட்டியில் குடியரசுத் துணைத் தலைவர் ஜெக்தீப் தங்கர் பேச்சு

ஊட்டி ஏப்.26

தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள் பங்கேற்கும் நான்காவது மாநாடு ஊட்டி ராஜ்பவனில் நேற்று தொடங்கியது. இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டை குடியரசு துணைத் தலைவர் ஜெக்தீப் தங்கர் துவக்கி வைத்தார். தமிழக ஆளுநர் ஆர் என் ரவி முன்னிலையில் நடைபெற்ற இம் மாநாட்டில் குடியரசு துணைத் தலைவர் பேசியதாவது,





நாட்டின் வளர்ச்சிக்கு கல்வி வளர்ச்சி மிகவும் அவசியம். உலக அளவில் தீவிரவாதம் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது . நாட்டின் வளர்ச்சியை எந்த சூழலிலும் தடுக்க முடியாது. தமிழகம் கல்வி துறையில் முன்னணி வகித்து வருகிறது . தலைசிறந்த கல்வி நிறுவனங்கள் தமிழகத்தில் உள்ளன. சென்னை பல்கலைக்கழகம் போன்ற பெருமை வாய்ந்த பல்கலைக்கழகங்களும் தமிழகத்தில் உள்ளது. இதன் காரணமாக கல்வி வளர்ச்சியில் தமிழகம் முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழகத்திலுள்ள பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சியில் அதிக கவனம் செலுத்த வேண்டும் இதன் மூலம் கல்வியின் தரத்தை மேம்படுத்த வழி வகை செய்யும். தரமான கல்வியின் மூலம் சமுதாயத்தில் முன்னேற்ற பாதைக்கு எடுத்துச் செல்ல முடியும். இது நாட்டின் தலையாய முன்னுரிமையாக திகழ்கிறது. தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழகங்கள் அரசியல் அதிக கவனம் செலுத்த வேண்டும். நமது சிந்தனைகளை மேம்படுத்தி கொள்கைகளை வகுக்க வேண்டும்

மாற்றத்தின் மூலமே வளர்ச்சி அடைய முடியும். வேகமாக மாறிவரும் காலகட்டத்தில் இந்தியா மேற்கொண்டுள்ள பல்வேறு மாற்றங்கள் உலக நாடுகள் மத்தியில் இந்தியாவை வல்லரசு நாடாக மாற்ற செய்துள்ளது. இதை உலக நாடுகளின் தலைவர்கள் அங்கீகரித்து வருகின்றனர், இதன் காரணமாக இந்தியாவின் மீதான மதிப்பும் மரியாதையும் உயர்ந்துள்ளது. இந்தியா அமைதி, மக்கள் நலன் மற்றும் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்து செயல்பட்டு வருகிறது இதை சர்வதேச அளவில் எடுத்து செல்வதில் இந்தியா அயராது பணியாற்றி வருகிறது என்றார்.

# ஊட்டி மாநாட்டில் பங்கேற்காதவாறு துணை வேந்தர்களுக்கு உளவுத்துறை மூலம் மிரட்டல்

## ஆளுநர் ஆர்.என்.ரவி குற்றச்சாட்டு

ஊட்டி, ஏப்.26-

ஊட்டியில் நடைபெறும் துணைவேந்தர்கள் மாநாட்டில் மாநில பல்கலைக்கழகத்தை சேர்ந்த துணைவேந்தர்கள் பங்கேற்ககூடாது என உளவுத்துறையை வைத்து தமிழக அரசு மிரட்டியதாக ஆளுநர் ஆர்.என்.ரவி பரபரப்பு குற்றச்சாட்டை தெரிவித்து உள்ளார்.

நீலகிரி மாவட்டம் ஊட்டியில் உள்ள ராஜ்பவனில் 4-வது ஆண்டாக துணைவேந்தர்கள் மாநாடு நேற்று தொடங்கியது. இரண்டு நாள் நடைபெறும் மாநாட்டில் சிறப்பு விருந்தினராக குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் கலந்து கொண்டார். இந்த மாநாட்டிற்கு தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி தலைமை தாங்கி பேசியதாவது-

கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்காக நடத்தப்பட்ட 4-வது மாநாடு ஆகும். மாநிலம் முழுவதும் கல்வி தகுதியை உயர்த்த வேண்டும். தமிழகத்தில் கல்வியில் தங்கப்பதக்கம் வெல்பவர்கள் கூட சிறிய அளவிலான நோக்கத்தை கொண்டுள்ளனர். தங்கப்பதக்கம் வெல்பவர்கள் அரசுப்பணியில் கிளாஸ்-1 கிளாஸ்- 2 பிரிவுகளில் சேர்வதற்கு மட்டுமே முயற்சி செய்கின்றனர்.

தமிழ்நாட்டு கல்வி நிலையில் 2 படிகள் உள்ளது. ஒரு அமைப்பு வேகமாக முன்னேறி செல்கிறது, ஒரு அமைப்பு பின்தங்கி காணப்படுகிறது. அதாவது தனியார் பள்ளிகள் சிறப்பாக செயல்படுகிறது, அரசு பள்ளிகள்






செயல்பாடு மோசமாக உள்ளது. பல அரசு பள்ளி மாணவர்கள் இரண்டாம் வகுப்பு பாட புத்தகத்தை கூட படிக்க முடியாத நிலையில் உள்ளனர். அரசு பள்ளியில் பாதிக்கும் மேற்பட்ட மாணவர்களால் 11 முதல் 99 வரை உள்ள 2 இலக்க எண்களை கூட படிக்க முடியவில்லை. எனவே தமிழகத்தில் கல்வி தரத்தை உயர்த்த வேண்டும்.

ஒரு வருடத்திற்கு 6500 பேர் டாக்டர் பட்டம் பெறுகின்றனர். ஆனால் அதில் ஒரு சதவீதம் பேர் கூட நெட், ஜேஆர்எப் உள்ளிட்ட தேர்வுகளில் தேர்ச்சி பெற முடியாத சூழ்நிலையில் உள்ளனர். நெட்-ஜேஆர்எப் தகுதி பெற்றவர்கள், ஆராய்ச்சியை மேற்கொள்ள அறிவுபூர்வமாகத் தகுதியானவர்கள் என்பதைக் காட்டுகிறார்கள். ஆனால் நமது பிஎச்டி பட்டதாரிகள் படிப்பு தகுதிக்கு சம்பந்தமில்லாத வேலைகளைச் செய்கிறார்கள், சிலர் துப்புரவு வேலைகளையும் செய்கிறார்கள். துப்புரவு வேலைகள் மோசமானவை அல்ல, ஆனால் பிஎச்டி முடித்த பிறகும், துப்புரவு வேலை செய்வது மகிழ்ச்சியான சூழ்நிலை கிடையாது. மாநிலப் பல்கலைக்கழகங்களில் படித்த விளிம்புநிலைப் பின்னணியைச் சேர்ந்த ஏழை மாணவர்கள்தான் இத்தகைய சூழ்நிலை சமூக நீதிக்கு ஒரு தடையாக உள்ளனர்.

இதேபோல் மாநில அரசு பல்கலைக்கழகங்களுக்கு மாநாட்டில் பங்கேற்கக் கூடாது என உத்தரவிடப்பட்டு உள்ளது. ஒரு பல்கலைக்கழக துணைவேந்தர் போலீஸ் நிலையத்தில் உள்ளார். சில பல்கலைக்கழக துணைவேந்தர்கள் ஊட்டி வந்து இருந்தனர். ஆனால் மாநில உளவுப்பிரிவு மற்றும் சிறப்பு பிரிவு போலீசார் இரவில் கதவைத் தட்டி நீங்கள் பல்கலைக்கழக துணைவேந்தர் மாநாட்டில் பங்கேற்றால் வீடு திரும்ப மாட்டீர்கள் என்று மிரட்டல் விடுத்துள்ளனர்.

இதனால் நான் மற்ற பல்கலைக்கழக துணைவேந்தர்களை வீட்டுக்கு சென்று குடும்பத்துடன் நிம்மதியாக இருங்கள் என்று கூறிவிட்டேன்.

கல்வி மேம்பாட்டில் அரசியல் இல்லை, பல்கலைகழக துணை வேந்தர் மாநாடு கல்வித்தரத்தை உயர்த்துவதற்காக மட்டுமே நடத்தப்படுகிறது. இதில் எந்த அரசியல் நோக்கமும் இல்லை. தமிழகத்தின் கல்வித்தரத்தை மேம்படுத்த ஒருங்கிணைந்த முயற்சிகள் தேவை. இவ்வாறு அவர் கூறினார்.



நீலகிரி மாவட்டம் ஊட்டிக்கு வருகை தந்த இந்திய குடியரசு துணை தலைவர் ஜெகதீப் தன்கரை, தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் புத்தகம் வழங்கி வரவேற்றார். உடன் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா உள்ளார்.



நீலகிரி மாவட்டம் ஊட்டிக்கு ஹெலிகாப்டர் மூலம் வருகை தந்த இந்திய குடியரசு துணை தலைவர் ஜெகதீப் தன்கரை, மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு புத்தகம் வழங்கி வரவேற்றார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ்.நிஷா உள்ளார்.

# வெள்ளித்திருப்பூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் காசநோய் ஒழிப்பு மற்றும் உலக மலேரியா தின விழிப்புணர்வு முகாம்



ஈரோடு ஏப் 26-

ஈரோடு மாவட்டம் குருவரெட்டியூர் வட்டாரம் வெள்ளித்திருப்பூர்அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் காசநோய் ஒழிப்பு மற்றும் உலக மலேரியா தின விழிப்புணர்வு முகாம் நேற்று நடைபெற்றது.

ஈரோடு மாவட்ட துணை இயக்குனர் காசநோய் மருத்துவப் பணிகள் மற்றும் மாவட்ட சுகாதார அலுவலரின் ஆலோசனையின் படி நடைபெற்ற இந்த முகாமில் காசநோய் பரவும் விதம், நுரையீரல் காசநோயின் அறிகுறிகள் அதன்பாதிப்புகள், காசநோய்க்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியவர்கள், காசநோய் பாதித்தவருடன் வசிப்போர் *CYTB* பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியதின் அவசியம்,நடமாடும் எக்ஸ்ரே ஊர்தியின் பயன்பாடுகள், காசநோய்க்கான சிகிச்சை காலத்தில் அரசால் வழங்கப்படும் உதவித்தொகை மற்றும் ஊட்டச்சத்து உணவு எடுத்துக் கொள்வதின் அவசியம், காசநோய் ஒழிப்பில் பொதுமக்களின் பங்கு, மலேரியா காய்ச்சல் பரவும் விதம், மலேரியா காய்ச்சலின் அறிகுறிகள் அதன் பாதிப்புகள், மலேரியா காய்ச்சலுக்கான இரத்த தடவல் பரிசோதனையின் அவசியம், மலேரியா எதிர்ப்பு தினத்தின் நோக்கம், கொசு உற்பத்தி தடுப்பு வழி முறைகள், காய்ச்சலுக்கு சுய மருத்துவம் தவிர்த்து மருத்துவமனையில் சிகிச்சை பெற வேண்டியதின் அவசியம் குறித்து விளக்கமாக சுகாதார நலக்கல்வி வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஈரோடு மாவட்ட துணை இயக்குனர் காசநோய் மருத்துவப் பணிகள் அலுவலக மாவட்ட நலக்கல்வியாளர் சிவகுமார் , மருத்துவ அலுவலர் மரு. சித்தேஸ்வரன், காசநோய் முதுநிலை சிகிச்சை மேற்பார்வையாளர் விஜயசேகர், சுகாதார ஆய்வாளர் சீனிவாசரகுபதி, நடமாடும் எக்ஸ்ரே ஊர்தி குழுவினர்,செவிலியர்கள் மற்றும் பொதுமக்கள் 90 பேர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் இந்த முகாமில் கலந்து கொண்டவர்களுக்கு காசநோய் ஒழிப்பு மற்றும் மலேரியா, டெங்கு எதிர்ப்பு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டதுடன், உலக மலேரியா தின உறுதி மொழி அனைவராலும் எடுத்துக் கொள்ளப்பட்டு, தேவைப்படுபவர்களுக்கு காசநோய்க்கான நெஞ்சக ஊடுகதிர் பட பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

# ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பாக மாவட்ட அமைப்பாளர் ஜெ.திருவாசகம் ஏற்பாட்டில் நீர் மோர் வழங்கல்



ஈரோடு ஏப் 26-

தமிழ்நாடுமுதலமைச்சரும்திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின்வேண்டுகோளுக்கிணங்கதிமுக இளைஞர்அணி செயலாளரும்,தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின்ஆலோசனின் பேரில்ஈரோடு தெற்கு மாவட்ட திமுக செயலாளரும்தமிழ்நாடு வீட்டுவசதி,நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் சு,முத்துசாமி வழிகாட்டுதலின்படி ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பாக மாவட்ட அமைப்பாளர் ஜெ.திருவாசகம் ஏற்பாட்டில்

தெற்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் கடந்த 10ம் தேதி முதல் நீர் மோர் பந்தல்ஈரோடுமணிக்கூண்டு பகுதியில் அமைக்கப்பட்டு, தினந்தோறும் மாநி மாவட்ட, ஒன்றிய, மாநகர, பகுதி நிர்வாகிகள் தலைமையில் நீர் மோர் வழங்கப்பட்டு வருகிறது. இதில், 16வது நாளாக நேற்று ஈரோடு மாநகர திமுக துணைச்செயலாளர் விமல் (எ) நந்தகுமார் தலைமையில், மொடக்குறிச்சி தெற்கு ஒன்றிய திமுகஇளைஞரணி அமைப்பாளர் ச. கலையரசன் முன்னிலையில் பொதுமக்களுக்கு நீர் மோர் மற்றும் செவ்வாழை, பூவன் பழம், வெள்ளரி மாங்கனிகள் நுங்கு குளிர்பானங்கள் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் அந்தியூர் இரா. நித்தின் ,மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் போட்டோஸ் சுப்பு மாணவரணி மணிசிவா, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# தென்னையில் சுருள் வெள்ளை ஈ கட்டுப்படுத்துதல் குமரகுரு வேளாண்மை கல்லூரி மாணவிகள் செயல் விளக்கம்



ஈரோடு ஏப் 26-

ஈரோடு மாவட்டம், ஆப்பக்கூடலில் உள்ள குமரகுரு வேளாண்மைக் கல்லூரி மாணவிகள் சு. ஷெரின் ஷைனி ரா. சுபாஷினி அ. யசோதா வை. ஹயந்திகா செ. திவ்யதர்ஷினிம.விஷ்ணுபிரியா ஆகியோர் தங்கள் இறுதி ஆண்டு பாடத்திட்டத்தின் ஒரு பகுதியான ஊரக வேளாண்மை அனுபவ பயிற்சிக்காக சென்னிமலை வட்டாரத்தில் தங்கி இருந்து விவசாயிகளின் வயல்களை நேரடியாக பார்வையிட்டு உரிய தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக தென்முகம் வெள்ளோடு தொட்டிபாளையம் கிராமத்தில் தற்பொழுது தென்னையை தாக்கி வரும் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்தும் விதமாக ஒரு ஏக்கருக்கு ஆயிரம் கிரிசோபெர்லா முட்டைகள் கொண்ட அட்டைகளை பயன்படுத்தி ரூகோஸ் சுருள் வெள்ளை ஈக்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது குறித்தும் மற்றும் நன்மை செய்யும் பூச்சிகளை எவ்வாறு அடையாளம் காணுவது என்பது குறித்தும் செயல் விளக்கம் மூ லம் விவசாயின் வயலில் செய்து காண்பித்தனர்.இச்செயல்விளக்கத்தின் போது குமரகுரு வேளாண்மை கல்லூரி உதவி பேராசிரியர் பூச்சியியல்துறை.இளங்கோ மற்றும் சென்னிமலை வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சாமுவேல் உடனிருந்து உரிய வழிகாட்டுதலை கல்லூரி மாணவிகளுக்கு வழங்கினர்.

# ஈரோடு மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார்



ஈரோடு.ஏப்.26-

ஈரோடு மாவட்ட கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்று குறைகளைக் கேட்டறிந்தார்.

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா தலைமையில் நடைபெற்றது.இக்கூட்டத்தில் கலெக்டர் தெரிவித்ததாவது,

ஈரோடு மாவட்டத்தின் இயல்பான ஆண்டு சராசரி மழையளவு 733.44 மி.மீ ஆகும். நடப்பு ஆண்டில் 25.04.2025 முடிய 101.88 மி.மீ பெய்துள்ளது. பவானிசாகர் அணையின் நீர்மட்டம் தற்போது 72.28 அடியாகவும், 11.93 மி.கன அடிநீர் இருப்பும் உள்ளது. நடப்பாண்டில் வேளாண்மை விரிவாக்க மையங்களில் விநியோகம் செய்வதற்காக நெல் விதைகள் 96 மெட்ரிக் டன்; சிறுதானியங்கள் 35 மெட்ரிக் டன்;, பயறுவகைகள் 17 மெட்ரிக் டன், எண்ணெய் வித்துக்கள் 16 மெட்ரிக் டன்; இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இரசாயன உரங்களான யூரியா 5425 மெட்ரிக் டன்;, டி.ஏ.பி 2444 மெட்ரிக் டன், பொட்டாஷ் 4226 மெட்ரிக் டன்; மற்றும்; காம்ப்ளக்ஸ் 7800 மெட்ரிக் டன் இருப்பில் உள்ளது. நடப்பு பருவத்திற்கு தேவையான இடுபொருட்கள் போதுமான அளவு இருப்பில் உள்ளன.

விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட்கள் அந்தந்த பகுதிகளில் உள்ள வட்டார மற்றும் துணை வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் இவற்றைப்பெற்று பயன்பெறலாம். மேலும் விவசாயிகளுக்கு தேவையான பூச்சிமருந்துகள் மற்றும் இரசாயன உரங்கள் போதுமான அளவு தனியார் மற்றும் கூட்டுறவு சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

பி.எம்.கிசான் திட்டத்தில் விவசாயிகள் ஆதார் விபரங்களை சரிபார்த்து உறுதிசெய்தால் இத்திட்டத்தின் கீழ் தொடர்ந்து நிதியுதவி பெறலாம்.

மேலும் பி.எம்.கிசான் நிதிஉதவி பெற்று வரும் விவசாயிகள் தங்களது வங்கிக் கணக்குடன் ஆதார் எண்ணை இணைக்க வேண்டியதும் அவசியமாகும். இதுவரை ஆதார் எண்ணை சரிபார்த்து உறுதி செய்யாத விவசாயிகள் மற்றும் வங்கிக்கணக்குடன் ஆதார் எண்ணை இணைக்காத விவசாயிகள்; உடனடியாக அந்தந்த பகுதியில் உள்ள வட்டார வேளாண்மை விரிவாக்கமையங்களை தொடர்பு கொண்டு பதிவு செய்து திட்டப்பயன்கள் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், வேளாண்மைத்துறையின் மூலம் உழவர்கள் பொது சேவை மையத்தை அணுகி விவசாயிகளுக்கான தனித்துவ அடையாள எண் பெற்று பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் வேளாண்மைத்துறை துணை இயக்குநர், உழவர் பயிற்சி நிலையம், P.ஞ.அருள்வடிவு வேளாண்மைத்துறையின் மூலம் வழங்கப்படும் வேளாண்மை திட்டங்கள் குறித்தும், கால்நடைத்துறையின் துணை இயக்குநர் கால்நடை வளர்ப்பிற்கு வழங்கப்படும் மானியம் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தனர். வேளாண் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் வேளாண் கல்லூரி மாணவர்களும் கலந்து கொண்டனர். விவசாயிகளிடமிருந்து 55 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது.

தொடர்ந்து, வேளாண்மைத்துறையின் மூலம் உயிர் உரங்கள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் குறித்து அமைக்கப்பட்டிருந்த கருத்துக்காட்சியினை கலெக்டர் பார்வையிட்டார்.

இக்கூட்டத்தில்; மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், வேளாண்மை இணை இயக்குநர் மீ.தமிழ்செல்வி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் பகத்தராஜா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சி.வேங்கநாதன், செயற்பொறியாளர் (வேளாண் பொறியியல்) மனோகரன், தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் குரு சரஸ்வதி, செயலாளர் துணை இயக்குநர் (ஈரோடு விற்பனைக்குழு) சாவித்திரி உட்பட விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஈதேஸ்வரா கூட்டுறவு கடன் சங்கத்தில் 50-வது ஆண்டு பொன்விழா கட்டிடம்: இணைப்பதிவாளர் இரா.தயாளன் திறந்து வைத்தார்

ஊட்டி, ஏப்.26-

நீலகிரி மாவட்டக் கூட்டுறவு ஒன்றியம் மற்றும் ஈதேஸ்வரா தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் இணைந்து முத்தொரை பாலடாவில் அமைந்துள்ள ஈதேஸ்வரா தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் 50வது ஆண்டு பொன்விழா, நவீனமயமாக்கப்பட்ட கட்டிடம் திறப்பு விழா மற்றும் சிறப்பு உறுப்பினர் கல்வித் திட்டம் ஆகிய முப்பெரும் விழா மண்டல இணைப்பதிவாளர் இரா. தயாளன் தலைமையில் சிறப்பான முறையில் நடைபெற்றது.




சட்டமன்ற மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி பல்வேறு கூட்டுறவு வங்கிகள் மற்றும் சங்கங்கள் நவீனமயமாக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டும் வருகின்றன. இவ்வாறாக நீலகிரி மாவட்டத்தில் இச்சங்கம் தேர்ந்தெடுக்கப்பட்டு நவீனமயமாக்கப்பட்டு தற்போது மண்டல இணைப்பதிவாளரால் ; திறந்து வைக்கப்பட்டுள்ளது என்றார்.

இதனை தொடர்ந்து அருகில் உள்ள கல்லக்கொரை கிராமத்தில் சிறப்பு உறுப்பினர் கல்வித் திட்டம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சங்கத்தின் செயலாளர் நாகராஜ் வரவேற்புரை வழங்கினார். நீலகிரி மாவட்ட கூட்டுறவு ஒன்றிய செயலாட்சியர் ரா. கௌரிசங்கர் திட்ட விளக்க உரையாற்றினார். அவ்வுரையில் உறுப்பினர் கல்வித் திட்டத்திற்கான நோக்கம் குறித்தும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் மற்றும் மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் மூலமாக நடத்தப்படுகின்ற கூட்டுறவு பிரச்சாரப் பணியில் குறித்தும் கல்வியில் நிறுவனங்கள் குறித்தும் உறுப்பினர்க்ளிடையே விரிவாக எடுத்துரைத்தார். நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை மேலாண்மை இயக்குநர் சி.அய்யனார் தனது முன்னிலையுரையில் கூட்டுறவுத் துறையால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கூட்டுறவு செயலி குறித்தும் அதை பதிவிறக்கம் செய்யும் வழிமுறைகள் குறித்தும் துணை முதலமைச்சரால்; அறிமுகப்படுத்தப்பட்ட சங்க உறுப்பினர் குடும்ப நல நிதி திட்டமாகிய வேர்கள் திட்டம் குறித்தும், கூட்டுறவு சங்க பணியாளர்களுக்கு உரித்தான விழுதுகள் திட்டம் குறித்தும், மூன்றாம் பாலினத்தவர்களுக்கு உரித்தான சிறகுகள் திட்டங்கள் குறித்தும் விளக்கமாக உரையாற்றினார். மேலும் இச்சங்கத்தின் மூலமாக பல்வேறு சேவைகள் அதன் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன எனவும் டிராக்டர், விவசாய உபகரணங்கள் ஆகியவை குறைந்த வாடகைக்கு விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன எனவும் அதனைப் பெற்று இப்பகுதி மக்கள் நல்ல முறையில் பயன்பெற வேண்டும் எனவும் கூறினார். மேலும் உறுப்பினராக அல்லாதவர்கள் தங்களை சங்கத்தில் உறுப்பினராக சேர்த்துக் கொள்ள படிவம் 16ஐ பூர்த்தி செய்து சங்க செயலாளரிடம் வழங்கி உறுப்பினராவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். பின்னர் உரையாற்றிய சங்கத்தின் முன்னாள் செயலாளர் ராஜ்குமார் இச்சங்கத்தினுடைய வரலாறு குறித்தும் இப்பகுதியில் கூட்டுறவு சங்கம் அமைய காரணமாக இருந்த மாதாகவுடர் குறித்தும் நினைவுகூர்ந்தார். மேலும் இவ் உறுப்பினர்கள் அளித்த அதிகப்படியான ஒத்துழைப்பின் காரணமாகவே இச்சங்கமானது 50 ஆண்டு காலம் தன்னுடைய பணியினை மகத்தாக செய்து கொண்டு வருகிறது எனவும் இந்நாள் வரை இச்சங்கத்தில் எந்த ஒரு தவணை தவறிய கடன் நிலுவையும் இல்லை என கூறினார். அடுத்தபடியாக கல்லக்கொரை ஊர் தலைவர் ராஜ்குமார், டி. முருகன், ஜே.எம். போஜன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாளர் ரவி கூட்டுறவு துறையின் மூலமாக வழங்கப்படக்கூடிய பல்வேறு கடன்கள் குறித்தும் மத்திய கூட்டுறவு வங்கி வாயிலாக வழங்கப்படும் பல்வேறு விதமான தொழில்நுட்ப சேவைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். மேலும் தனியார் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு ஈடாக கூட்டுறவு வங்கிகளும் தற்பொழுது அனைத்து வகையான தொழில்நுட்ப சேவைகளும் இணையவழி வங்கியில் சேவைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. எனவே மக்கள் அனைவரும் கூட்டுறவு வங்கிக்கு தங்களுடைய ஆதரவினை வழங்கி முன்னேறு வழிவகை செய்யுமாறு கேட்டுக் கொண்டார். நஞ்சநாடு தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையின் சார்பாக கலந்து கொண்ட அதன் செயலட்சியர் முத்துகிருஷ்ணன் தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையினுடைய செயல்பாடுகள் குறித்தும், தொழிற்சாலைக்கு அதிக அளவில் தேயிலை விநியோகம் செய்யும் உறுப்பினர் பெருமக்களுக்கு விலையில்லா தேயிலை அறுவடை இயந்திரம், தெளிப்பான்கள் தற்பொழுது அரசிடம் பெறப்பட்ட இண்ட்கோ மூலமாக வழங்கப்படுகிறது எனவும் இதுபோல பல்வேறு ஊக்க செயல்பாடுகள் இனிவரும் காலங்களில் செயல்படுத்தப்படும் எனவே உறுப்பினர்கள் அதிகப்படியாக தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைக்கு தங்களது தேயிலை வழங்கி பயன்பெறுமாறு கேட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சியில் தலைமை உரையாற்றிய மண்டல இணைப்பதிவாளர் தயாளன் கூட்டுறவுத் துறையின் இலட்சினையான இணைந்த கரங்கள் குறித்து எடுத்துரைத்தார். இந்த இணைந்த கரங்கள் என்பது கூட்டுறவுத் துறை அதிகாரிகள், கூட்டுறவுச் சங்க பணியாளர்கள் மற்றும் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் ஆகியோரிடையே இணக்கமாக இருந்தால் மட்டுமே கூட்டுறவு இயக்கமானது ஆரோக்கியமாக செயல்பட முடியும் எனவும் ஒவ்வொரு உறுப்பினரும் விழிப்புணர்வோடும், முழு ஈடுபாடோடும் செயல்படும் பட்சத்தில் இச்சங்கத்தை மென்மேலும் மேம்படுத்த முடியும் எனவும், ஒவ்வொரு வருடமும் நிகர லாபத்தில் சங்கத்தை எடுத்துச் செல்ல முடியும் எனவும் அவ்வாறு எடுத்துச் செல்லும் பொழுது சங்க உறுப்பினர்கள் தங்களுடைய பங்குகளின் பெயரில் அதிகபட்சமாக 14சதவீதம் வரை பங்கு ஈவுத்தொகை பெற்று பயனடைவர் எனவும் எடுத்துரைத்தார். கூட்டுறவானது முதலாளித்துவத்திற்கும் பொதுவுடைமைக்கும் இடையேயான ஒரு இணைப்புப் பாலம் ஆகும். மேலும் இது ஜனநாயக முறையில் நிர்வகிக்கப்படுகின்ற ஒரு உன்னதமான அமைப்பாகும். இச்சங்கத்தின் உறுப்பினர்களே அதன் உரிமையாளர்கள் ஆவர். இச்சங்கமானது இப்பகுதி உறுப்பினர்களின் நல்ல ஆதரவுடன் சிறப்பாக செயல்பட்டு தனது 50வது ஆண்டில் அடியெடுத்துவைத்துள்ளதோ அதேபோல் மேன்மேலும் இச்சங்கம் வளர்ந்து தனது நூறாவது செஞ்சுரி ஆண்டை நல்ல முறையில் அடைய வேண்டும் எனக் கூறினார். இறுதியாக சங்க செயலாட்சியர் சந்தியா நன்றி கூறினார்.

# நந்தா பாலிடெக்னிக் கல்லூரியில் வளாகத்தேர்வு




ஈரோடு ஏப் 26-

ஈரோடு நந்தா பாலிடெக்னிக் கல்லூரியில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் சார்பில் இறுதியாண்டு பயின்று வெளியேறும் மாணவர்களுக்கென, பெயிண்ட் தயாரிப்பில் முன்னணி வகித்து வரும் "ஆதித்யா பிரலா" நிறுவனமானது தனது வளாகத்தேர்வினை அண்மையில் நடத்தியது.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளைத் தலைவர் .வி.சண்முகன் தலைமையில் நடைபெற்ற இவ்வளாகத் தேர்வினை "ஆதித்யா பிர்லா நிறுவனத்தின் துணை மனிதவள மேலாளர் திருமதி மஹாலெஷ்மி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு குத்துவிளக்கு ஏற்றி நிகழ்ச்சியினைத் துவக்கி வைத்தார்.

நந்தா பாலிடெக்னிக் கல்லூரியின் முதல்வர் ஜீ. மோகன்குமார் வரவேற்றார் .நந்தா பாலிடெக்னிக் கல்லூரி வேலைவாய்ப்புத் துறை அதிகாரி கே. வி. பிரபு முன்னிலை வகித்தார்.

பின்னர் "ஆதித்யா பிர்லா" நிறுவனத்தின் துணை மனிதவள மேலாளர் மஹாலெஷ்மி உரையாற்றுகையில், சிமெண்ட், இரும்பு, துணி வகைகள் போன்ற பல்வேறு துறைகளில் சிறப்பாக செயல்பட்டு வரும் ஆதித்யா பிரலா குழுமத்தின் ஓர் அங்கமாக இந்த நிறுவனம் செயல்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

மேலும் வளாகத்தேர்வு சம்மந்தமான மாணவர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்தார்.இவ்வளாகத்தேர்விற்கு ஈரோடு, நாமக்கல், சேலம், கரூர் மற்றும் கோவை பகுதிகளில் செயல்பட்டு வரும் வெவ்வேறு பாலிடெக்னிக் கல்லூரிகளிலிருந்து சுமார் 420க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

அவர்களுக்கு முதலில் எழுத்துத் தேர்வும் அதனைத் தொடர்ந்து நேர்முகத் தேர்வும் நடத்தப்பட்டது. இறுதியாக வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

இவ்வளாகத் தேர்வினை ஏற்பாடு செய்திருந்த கல்லூரியின் வேலைவாய்ப்பு அலுவலக ஆசிரியர்களை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் செயலர் எஸ்.நந்தகுமார் பிரதீப், நந்தா கல்வி நிறுவனங்களின் செயலர் எஸ்.திருமூர்த்தி, முதன்மை கல்வி அதிகாரி ஆறுமுகம் மற்றும் தொழில்நுட்ப வளாகத்தின் நிர்வாக அலுவலர் ஏ.கே. வேலுசாமி ஆகியோர் பாராட்டினார்கள்.

# ஈரோடு மாவட்டத்தில் புது மஞ்சள் வரத்து அதிகரிப்பு

ஈரோடு, ஏப்.26 -

ஈரோடு மாவட்டத்தில் மார்ச் இறுதி வாரம் முதல் புதிய மஞ்சள் விற்பனை வரத்தாகிறது. மே மாதம் இறுதி வரை அறுவடை நடக்கும். தற்போதைய நிலையில் பழைய மஞ்சள் இருப்பு வைக்கப்பட்டு புதிய மஞ்சள் அதிகமாக வரத்தான நிலையிலும் விலையில் பெரிய மாற்றம் இல்லை. இது குறித்து ஈரோடு மஞ்சள் வணிகர்கள் மற்றும் கிடங்கு உரிமையாளர் சங்கசெயலாளர் சத்தியமூர்த்தி கூறியதாவது:-

தற்போதைய நிலையில் கர்நாடாவில் இருந்து ஈரோட்டுக்கு வரும் புதிய மஞ்சள் வரத்து குறைந்துள்ளது. தர்மபுரி பகுதி மற்றும் ஈரோடு உள்பட சுற்றுப்பகுதி புதிய மஞ்சள் வரத்திறது. விலையில் பெரிய அளவில் மாற்றமில்லை. ஏப்ரல் 7-ந் தேதி குவிண்டால் 1,500 வரை விலை உயர்ந்து மீண்டும் குறைந்தது. தற்போதைய நிலையில் ஈரோடு பகுதியில் முழு அளவில் அறுவடை பணி நடந்து தயார் செய்யப்பட்டு விற்பனைக்கும் வரத்தாகிறது. அதேநேரம் மகாராஷ்டிராவில் மிக அதிகமாக அறுவடை நடந்து வருவதால் விற்பனை அதிகமாக நடக்கிறது தினமும் 50,000 மூட்டைகள் வரை அங்கு வரத்தாவதால் தேவையை பூர்த்தி செய்வதால் இங்கு விலை உயரவில்லை. அங்கே இன்னும் ஒரு மாதத்திற்கு இதே போன்ற அறுவடை நடக்கும். அதே நேரம் பிற மாநிலங்களில் நிஜமா பாத், சாங்கிலியில் புதிய மஞ்சள் வரத்து குறைந்துவிட்டது. ஈரோடு மாவட்டத்தில் ஜூன் மாதம் தான் முழு அளவில் நடவு பணி தொடங்கும். அப்போது மீண்டும் விலையில் மாற்றம் ஏற்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## கோபி பொம்ம நாயக்கன் பாளையத்தில்

# உலக மலேரியா தின விழிப்புணர்வு பேரணி



ஈரோடு ஏப். 26-

ஈரோடு மாவட்டம் கோபி வட்டாரம் சிறுவலூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையப் பகுதிக்கு உட்பட்ட பொம்ம நாயக்கன் பாளையத்தில் ஸ்ரீ வெங்கடேஸ்வரா பாரா மெடிக்கல் கல்லூரியில் பயிலும் நர்சிங் மாணவியர்களை கொண்டு உலக மலேரியா தின விழிப்புணர்வு முகாம் மற்றும் பேரணி நேற்று நடத்தப்பட்டது.

ஈரோடு மாவட்ட சுகாதார அலுவலர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் சிறுவலூர் வட்டார மருத்துவ அலுவலரின் ஆலோசனையின் படியும் நடைபெற்ற இந்த முகாமில் மலேரியா காய்ச்சல் பரவும் விதம், மலேரியா காய்ச்சலின் அறிகுறிகள் அதன் பாதிப்புகள், மலேரியா காய்ச்சலுக்கான இரத்த தடவல் பரிசோதனையின் அவசியம், கொசு உற்பத்தி தடுப்பு வழிமுறைகள், காய்ச்சலுக்கு சுய மருத்துவம் தவிர்த்து மருத்துவமனையில் சிகிச்சை பெற வேண்டியதின் அவசியம் குறித்து விளக்கமாக சுகாதார நலக்கல்வி வழங்கப்பட்டது .

தொடர்ந்து ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்லூரி நர்சிங் மாணவியர்களை கொண்டு உலக மலேரியா தின விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. இந்தப் பேரணி பொம்ம நாயக்கன்பாளையம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் துவங்கி பொம்ம நாயக்கன்பாளையம் காலனி வரை சென்று முடிவு பெற்றது. பேரணி சென்ற வழியில் பொதுமக்களுக்கு உலக மலேரியா தின விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வுகளில் ஸ்ரீ வெங்கடேஸ்வரா பாரா மெடிக்கல் கல்லூரி முதல்வர், மருத்துவ அலுவலர் கார்த்திகா தேவி, பள்ளி சிறார் நல மருத்துவ குழுவினர், வட்டார சுகாதார மேற்பார்வையாளர் ரகுபதி, வட்டார மருத்துவ அலுவலர் மேற்பார்வையாளர் முருகேசன், சுகாதார ஆய்வாளர்கள் பிரகாஷ், சேதுராமன், சுகாதார செவிலியர் ஸ்வேதா, கிராம நிர்வாக அலுவலர் வேலுமணி, ஊராட்சி மன்ற செயலாளர் சதீஷ், அங்கன்வாடி அமைப்பாளர் பரிமளா, நர்சிங் கல்லூரி விரிவுரையாளர்கள், மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். இறுதியாக அனைவரும் உலக மலேரியா தின உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது.

# ஆரோக்கியமான சிற்றுண்டிக்கு ஆலோசனை வழங்கும் நடிகை வாணி போஜன்

கோவை, ஏப்.26-

இன்றைய பரபரப்பான வாழ்க்கை சூழலில் ஆரோக்கியமான உணவுகளை நாம் கண்டறிவது என்பது மிகுந்த சவாலான ஒன்றாக உள்ளது. நாம் சாப்பிடும் பெரும்பாலான உணவுகள் அதன் ருசியின் காரணமாக நம்மை அதிகம் சாப்பிடத்தூண்டும். அவை நமது உடலுக்கு ஆரோக்கியம் தருமா? அல்லது தீங்கு விளைவிக்குமா? என்பது தெரியாமல் அவற்றை நாம் சாப்பிடுகிறோம். இந்த நிலையில் நடிகை வாணி போஜன், தனது உடல் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை கொண்டவர். மேலும் அவர் உடலுக்கு ஆரோக்கியம் தரும் உணவுகளை மட்டுமே எடுத்துக் கொள்கிறார். சமச்சீரான உணவுடன், பாதாம், தயிர், பருவகால பழங்கள் போன்ற சிற்றுண்டிகளையும் சாப்பிடும் அவர், உடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் பதப்படுத்தப்பட்ட உணவுகளைத் தவிர்த்துவிடுகிறார். இதற்கு உதவியாக, நடிகை வாணி போஜன் இன்ஸ்டாகிராமின் மூலம் தனது ஆரோக்கியம் குறித்தும் டயட் ஷூட்டிங்கின்போது மற்றும் நாள் முழுவதும் தான் சுறுசுறுப்பாகவும் இருப்பதன் ரகசியம் குறித்தும் ரசிகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார். ஒரு கைப்பிடி பாதாம் ஒரு சிறந்த சிற்றுண்டியாக இருக்கும். இது உடல் ஆற்றலை அதிகரிக்கச் செய்வதோடு 3 வேளை உணவுக்கு இடையில் பசியைக் கட்டுப்படுத்த உதவுகிறது. .கிரேக்க தயிர், அதிக புரதம் மற்றும் புரோபயாடிக் நிறைந்த உணவாகும். இது ஒரு சிறந்த சத்தான சிற்றுண்டியாகும். கிரேக்க தயிருடன், பெரிப், ஆப்பிள் அல்லது வாழைப்பழம் போன்ற பழங்களையும், மொறுமொறுப்பு மற்றும் ஊட்டச்சத்துக்கு பாதாம் சேர்க்கலாம். சிறிது லவங்கப்பட்டை அல்லது ஒரு சில துண்டுகள் பாதாம் சேர்த்து சாப்பிடலாம். பாசிப்பருப்பு மாவிலிருந்து தயாரிக்கப்படும் மூங் தால் சில்லா, அல்லது சுவையான பான்கேக்குகள், சத்தான மாலை அல்லது காலை சிற்றுண்டிக்கு சிறந்த உணவாகும். ஊறவைத்த பாசிப்பருப்பை மென்மையான மாவில் கலந்து, கீரை, கேரட் மற்றும் வெங்காயம் போன்றவற்றை சேர்த்து சாப்பிடலாம். குறைந்த எண்ணெயைப் பயன்படுத்தி, நான்-ஸ்டிக் பாத்திரத்தில் இதை செய்ய வேண்டும். இந்த பான்கேக்குகள் புரதம் மற்றும் நார்ச்சத்து நிறைந்தவையாகும்.இரவு நேர ஓட்ஸ் என்பது சத்தான மற்றும் பல்துறை திறன் கொண்ட ஒரு சரியான சிற்றுண்டியாகும்என்று வாணி போஜன் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவின் முதல் வரம்பற்ற டேட்டா திட்டமான நான்ஸ்டாப் ஹீரோ தமிழ்நாட்டில் வி.ஐ.அறிமுகம்

கோவை, ஏப்.26-

செய்தித் தொடர்புத் தொழில்நுட்பத்தால் அபரிமிதமாக இணைக்கப்பட்டுள்ள இன்றைய உலகில் தடையற்ற இணையத்தரவு அத்தியாவசியமானது. பணிகள் தொடங்கி கல்வி வரை, ஆரோக்கியம் முதல் பொழுதுபோக்கு வரை செல்பேசி தரவுகள் அத்தியாவசியமாக உள்ளது. இதற்கு நம்பகம் வாய்ந்த, கவலைப்படா அவசியமில்லாத வகையில் இணையத்தரவு தங்குதடையின்றி கிடைப்பது அவசியமானது. இந்தத் தேவையை நிறைவேற்றும் வகையில் இந்தியாவின் முன்னணி தொலைதொடர்பு சேவை நிறுவனமான விஐ, உண்மையிலேயே வரம்பற்ற அன்லிமிடெட் டேட்டா திட்டத்தை இந்தியாவில் முதல்முறையாக அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் பெயர் விஐ நான்ஸ்டாப் ஹீரோ . இத்திட்டம் தமிழ்நாட்டில் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்படுகிறது. ப்ரீபெய்ட் வாடிக்கையாளர்களுக்கு வரம்புக்குட்பட்ட டேட்டாவே கொடுக்கப்படுவதால் எப்போதும் டேடாவின் நிர்ணயிக்கப்பட்ட வரம்பு தீரலாம் என்ற நிலை உள்ளது. இந்த அசௌகரியத்தைத் தவிர்க்க, நான்ஸ்டாப் ஹீரோ ப்ளான் திட்டத்தின் மூலம் வரம்பற்ற டேட்டா அனுபவத்தை சந்தாக் காலம் முழுவதும் பெறலாம். விஐ நான்ஸ்டாப் ஹீரோ திட்டம், அதிவேக இணையவசதிக்கான தேவையை பூர்த்திசெய்வதற்காக கொண்டுவரப்பட்ட திட்டம். உண்மையிலேயே வரம்பற்ற சேவையை வழங்கும் இத்திட்டத்தில் வரம்பில்லாத குரல் அழைப்பு வசதி இருப்பதால், எல்லாரிடமும் எந்தவித தடைகளும் இல்லாமல் பேசலாம். எல்லாவிதமான ரீசார்ஜ் திட்டங்களுக்கும் பொருந்தக்கூடியது. 4 ஜி லைவ் வீடியோ, 4 ஜி வீடியோ, 4 ஜி கேமிங், 4 ஜி வாய்ஸ் மற்றும் 4 ஜி டவுன்லோட் அப்லோட் வேகம் என பல்வேறு அனுபவங்களைத் தரும் தொலைத்தொடர்பு சேவை நிறுவனமாக விஐ அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஓப்பன்சிக்னல்ஸ் 4 ஜி நெட்வொர்க் எக்ஸ்பிரியன்ஸ் ரிப்போர்ட் நவம்பர் 2024இன் படி தமிழ்நாட்டின் தொலைத் தொடர்பு சேவை நிறுவனங்களில் முதலிடம் பெற்றுள்ளது. விஐ நான்ஸ்டாப் ஹீரோ திட்டம் மூலம் வாடிக்கையாளர்களை முன்னிறுத்தி வரம்பற்ற இணையத்தரவைப் பெறும்வண்ணம் அவர்களை தன்னிறைவாக்குகிறது. 380 ரூபாயிலிருந்து தொடங்கும் விஐ நான்ஸ்டாப் ஹீரோ திட்டம் தற்போது தமிழ்நாட்டிலும் கிடைக்கிறது.

# ஆட்டோ ஓட்டுநரிடம் பணம் மற்றும் ஆட்டோவை பறித்த ஒருவர் கைது

சென்னை ஏப் 26-

சென்னை, மேற்குமாம்பலம், ஜோதிராமலிங்கம் தெருவில் வசித்து வரும் கணேஷ்குமார், என்பவர் ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறார். இவர் தி.நகர், ஜெயின்கல்லூரி அருகே ஆட்டோவில் சென்று கொண்டிருந்த போது, அங்கு நின்று கொண்டிருந்த அறிமுகமான பாலமுருகன் என்பவர் மேற்படி கணேஷ்குமாரை வழிமறித்து அவதூறாக பேசி, கையால் தாக்கி அவரிடமிருந்து ரூ.2,700/- பறித்துள்ளார். மேலும் கணேஷ்குமாரை ஆட்டோவிலிருந்து கீழே தள்ளிவிட்டு, ஆட்டோவை எடுத்துக்கொண்டு தப்பிச்சென்றுள்ளார். இது குறித்து கணேஷ்குமார் மாம்பலம் காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணைமேற்கொண்டனர்.

மாம்பலம் காவல் நிலைய குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழிப்பறி வழக்கில்சம்பந்தப்பட்ட பாலமுருகன், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து ரொக்கம் ரூ.2,700/- மற்றும் 1 ஆட்டோ மீட்கப்பட்டது. கைது செய்யப்பட்ட எதிரி பாலமுருகன் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
C3, Private industrial Estate, sidco industrial Estate,sidco po Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

